

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 199 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 17 – வியாழக்கிழமை 29 பிப்ரவரி 2024 – வெளியூர் 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 199: Thiruvalluvar Year - 2055 - Maasi 17 - Thursday 29 February 2024 - Dak 28 Pages ₹ 5.00


## மார்ச் 2, 3, 4–ஆம் தேதிகளில் கழக அரசின் நிதிநிலை விளக்க மற்றும் “எல்லோர்க்கும் எல்லாம்”

# திராவிட மாடல் நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள்!

## தமிழ்நாடு முழுதும் மாநகரம், நகரங்களில் நடைபெறுகிறது! தலைமைக் கழகம் அறிவிப்பு!

சென்னை, பிப். 29 -

**மார்ச் 2, 3 மற்றும் 4ஆம் தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் மாநகரம் மற்றும் நகரங்களில் “எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!” நடைபெறுகிறது என தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

தலைமைக் கழக அறிவிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 23.2.2024 அன்று காணொலி காட்சி வாயிலாக “தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் “மார்ச் 1-ஆம் தேதியன்று நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 71-ஆம் அகவையில் அடியெடுத்து வைக்கிறார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரரான நம் தலைவர், கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பில் அமரவைத்த பெருமையைப் பெற்றுத்தந்துள்ளார். தந்தை பெரியாரின் சமூக நீதியையும், பேரறிஞர் அண்ணாவின் மாநிலசுயாட்சிக் கொள்கையையும், தமிழினத் தலைவர் கலைஞரின் சமூகநலத் திட்டங்களையும் மனதில் தாங்கி திராவிடமாடல் ஆட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார் கழகத் தலைவர் அவர்கள்.

அத்தகைய பெருமைமிகு தலைவரின் பிறந்தநாளை நாம் அனைவரும் சீரியவகையில் கொண்டாடும் விதமாக திராவிடமாடல் அரசின் சாதனைகள் மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்கும் பொதுக்கூட்டங்களை தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி, நகராட்சிகளில் தலைமைக் கழக அறிவிப்பின்படி நடத்திடுவது” என நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

வருகிற மார்ச் 2, 3 மற்றும் 4ஆம் தேதிகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாநகரம் மற்றும் நகரங்களில் அறிவிக்கப்பட்டுள்ள பேச்சாளர்களைக் கொண்டு ,“எல்லோருக்கும் எல்லாம்” “திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!” நடத்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### நாள்: 04.03.2024 (திங்கட்கிழமை)

| | | |
|---|---|---|
| செங்கல்பட்டு நகரம் | - | **கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன்**<br>எஸ்.ஜெகத்ரட்சகன் |

### நாள்: 02.03.2024 (சனிக்கிழமை)

| இடம் | சிறப்புரை |
|---|---|
| திருவெறும்பூர் | மாண்புமிகு இ. பெரியசாமி |
| திண்டுக்கல் மாநகரம் | முனைவர் க. பொன்முடி |
| கோபிச்செட்டிப்பாளையம் நகரம் | ஆ. ராசா |
| ஈரோடு மாநகரம் | கனிமொழி கருணாநிதி |
| நாமக்கல் நகரம் | திருச்சி சிவா |
| நாகப்பட்டினம் நகரம் | மாண்புமிகு எ.வ. வேலு |
| நாகர்கோவில் மாநகரம் | மாண்புமிகு தங்கம் தென்னரசு |
| வேலூர் மாநகரம் | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| பண்ருட்டி நகரம் | மாண்புமிகு கோவி. செழியன் |
| மதுரை மாநகரம் | தயாநிதி மாறன் |
| அதிராம்பட்டிணம் நகரம் | ஏ.கே.எஸ். விஜயன் |
| மறைமலை நகர் நகரம் | தமிழச்சி தங்கபாண்டியன் |
| வேதாரண்யம் நகரம் | மருத்துவர் எழிலன் நாகநாதன் |
| செய்யாறு நகரம் | சி.வி.எம்.பி. எழிலரசன் |
| இராணிப்பேட்டை நகரம் | இ.பரந்தாமன் |
| பேரணாம்பட்டு நகரம் | ஆ. கிருஷ்ணசாமி |
| மாங்காடு நகரம் | வாகை சந்திரசேகர் |
| எடப்பாடி நகரம் | திண்டுக்கல் ஐ. லியோனி |
| விக்கிரமசிங்கபுரம்நகரம் | நாஞ்சில் சம்பத் |
| இராமநாதபுரம் நகரம் | இயக்குநர் கரு.பழனியப்பன் |
| உளுந்தூர்பேட்டை நகரம் | சூர்யா வெற்றிகொண்டான் |
| ஒட்டன்சத்திரம் நகரம் | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| சேலம் மாநகரம் | சரத்பாலா |
| மானாமதுரை நகரம் | வரகூர் காமராஜ் |
| ஆற்காடு நகரம் | தஞ்சை கூத்தரசன் |
| குளித்தலை நகரம் | துரை.கி.சரவணன் |
| திருவண்ணாமலை நகரம் | தமிழன் பிரசன்னா |
| கொடைக்கானல் நகரம் | இரா. ராஜீவ்காந்தி |
| சுரண்டை நகரம் | குத்தாலம் அன்பழகன் |
| சிதம்பரம் நகரம் | குத்தாலம் பி. கல்யாணம் |
| திருமுருகன்பூண்டி நகரம் | ஆர். மகேந்திரன் |
| பெரம்பலூர் நகரம் | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| திருவேற்காடு நகரம் | மனுஷ்யபுத்திரன் |
| திருத்தணி நகரம் | கோவி. லெனின் |
| கிருஷ்ணகிரி நகரம் | காசிமுத்து மாணிக்கம் |
| புஞ்சை புளியம்பட்டி நகரம் | சேலம் சுஜாதா |
| மதுக்கரை நகரம் | ஈரோடு இறைவன் |
| வாணியம்பாடி நகரம் | கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் |
| புளியங்குடி நகரம் | முனைவர்சபாபதிமோகன் |
| போடிநாயக்கனூர் நகரம் | மதுரை எஸ். பாலா |
| அருப்புக்கோட்டை நகரம் | பவானி ராஜேந்திரன் |
| கரூர் மாநகரம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| விருதுநகர் நகரம் | சைதை சாதிக் |
| துவாக்குடி நகரம் | கா.அமுதரசன் |
| நெல்லிக்குப்பம் நகரம் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| இடங்கணசாலை நகரம் | கோவைசெல்வராஜ் |
| வெள்ளக்கோவில் நகரம் | வி.சி.சந்திரகுமார் |
| அரியலூர் நகரம் | கடலூர் இள. புகழேந்தி |
| திருவாரூர் நகரம் | கவிச்சுடர் கவிதைப்பித்தன் |
| பெரியகுளம் நகரம் | வி.பி. இராசன் |
| கூடலூர் (தேனி) நகரம் | தமிழரசி |
| திருச்செங்கோடு நகரம் | சித்திக் |



### நாள்: 03.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)

| இடம் | சிறப்புரை |
|---|---|
| திருமங்கலம் நகரம் | மாண்புமிகு கே.என்.நேரு |
| கோயம்புத்தூர் மாநகரம் | ஆ. ராசா |
| கடலூர் மாநகரம் | ஆர்.எஸ். பாரதி |
| விருத்தாச்சலம் நகரம் | மாண்புமிகு எ.வ. வேலு |
| காஞ்சிபுரம் மாநகரம் | மாண்புமிகு மா.சுப்பிரமணியன் |
| இலால்குடி நகரம் | மாண்புமிகு டி.ஆர்.பி. ராஜா |
| சங்கரன்கோவில் நகரம் | பொன். முத்துராமலிங்கம் |
| மேலூர் நகரம் | திருச்சி சிவா |
| சிவகாசி மாநகரம் | தயாநிதி மாறன் |
| கும்பகோணம் மாநகரம் | டி.கே.எஸ். இளங்கோவன் |
| ஓசூர் மாநகரம் | மாண்புமிகு கோவி. செழியன் |
| ஆம்பூர் நகரம் | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| பத்மநாபபுரம் நகரம் | முனைவர் சபாபதி மோகன் |
| கோவில்பட்டி நகரம் | நாஞ்சில் சம்பத் |
| திட்டக்குடி நகரம் | ஆரணி மாலா |
| சாத்தூர் நகரம் | கந்திலி கரிகாலன் |
| குடியாத்தம் நகரம் | தருண் விஸ்வநாதன் |
| அறந்தாங்கி நகரம் | மருத்துவர் எழிலன் நாகநாதன் |
| பள்ளிபாளையம் நகரம் | மாண்புமிகு எஸ்.எஸ்.சிவசங்கர் |
| களக்காடு நகரம் | சூர்யா சேவியர் |
| ஜெயங்கொண்டம் நகரம் | சல்மா |

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

இமாச்சலப்பிரதேசத்தில் அமளியில் ஈடுபட்ட

## 15 பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் சஸ்பெண்டு!

### சபாநாயகர் நடவடிக்கை!

சிம்லா, பிப். 29 –

இமாச்சலப்பிரதேச சட்டசபை நேற்று கூடியபோது, எதிர்க்கட்சியாக உள்ள பா.ஜ.க. உறுப்பினர்கள் அவையில் அமளியில் ஈடுபட்டனர். அவர்களை அமரும்படி சபாநாயகர் கூறினார். ஆனால், அவர்கள் அதனை கண்டு கொள்ளவில்லை.

இந்நிலையில், முழக்கங்களை எழுப்பி அமளியில் ஈடுபட்டதுடன், சபாநாயகர் அறையில் தவறாக நடந்து கொண்டதற்காக பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் 15 பேரை சஸ்பெண்டு செய்து சபாநாயகர் அதிரடி உத்தரவை பிறப்பித்து உள்ளார். அவர்கள் அவையில் இருந்தும் வெளியேற்றப்பட்டனர்.

இதேபோன்று, மூத்த காங்கிரஸ் தலைவர் மற்றும் பொது பணித்துறை மந்திரியான விக்ரமாதித்யா சிங் ராஜினாமா செய்துள்ளார். இதனால், அரசியல் ஸ்திரமற்ற சூழலை இமாச்சலப்பிரதேசம் எதிர்கொண்டு உள்ளது. முதல்மந்திரிக்கு எதிராக நம்பிக்கை வாக்கெடுப்பு கோரக் கூடிய சூழலில், 15 எம்.எல்.ஏ.க்கள் மீது சஸ்பெண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

---

நாடாளுமன்றத் தேர்தல்:

## கேரளாவில் காங்கிரஸ் கட்சி தொகுதி பங்கீடு!

திருவனந்தபுரம், பிப். 29 -

கேரளாவில், மக்களவை தேர்தலுக்கான போட்டியில், ஐக்கிய ஜனநாயக முன்னணியில் இடம் பெற்றுள்ள கூட்டணி கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு சீட் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இதனை கேரள சட்டசபை எதிர்க்கட்சி தலைவரான வி.டி. சதீசன் நேற்று கூறியுள்ளார்.

இதுபற்றி செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர்,

கேரளாவில் 20 மக்களவை தொகுதிகளுக்கான போட்டியில் 16 இடங்களில் காங்கிரஸ் போட்டியிடும். கூட்டணியில் 2வது பெரிய கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு 2 இடங்களும், கே.சி.ஜே. (ஜே.) மற்றும் ஆர்.எஸ்.பி. ஆகிய இரு கட்சிகளுக்கு தலா 1 இடமும் ஒதுக்கப்பட்டு உள்ளன.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சமீபத்தில், இந்த முறை தேர்தலில் கூடுதலாக ஒரு தொகுதியை கேட்டு பெறுவோம் என கூறியிருந்தது.

எனினும், இந்த விவகாரம் ஆலோசனை நடத்தி தீர்க்கப்பட்டு விட்டது என சதீசன் கூறினார். இதற்கு பதிலாக, ராஜ்ய சபைக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் சிறப்பிதழ்!

### நாளை வெளிவருகிறது!

**‘திராவிட மாடல்’ ஆட்சியின் தலைவர், திராவிட நாயகர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் சிறப்பிதழ் மார்ச் முதல் நாளன்று ‘முரசொலி’யுடன் வெளிவருகிறது!**

